**கந்தளாய் பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 மே 27, 2019 மே 31 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கந்தளாய் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 ஊழியர்களின் ஊழியர் பிணையாக பிரதேச சபையில் நிலையான வைப்பில் வைக்கப்பட்டுள்ள ரூபா 18,000 பணம் முழுமையாக கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பிரதேச சபையின் நிலையான வைப்பில் வைக்கப்பட்டுள்ள ஆனால் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டுள்ள ஊழியர் பிணைப்பணம் 2019 கணக்கு கூற்றுக்களில உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | 2018 ஆம் வருடத்தின் மாகாணம் குறித்த அபிவிருத்தி சகாய நிதி செயற்திட்டத்தின் (PSDG)ஏற்பாட்டினால் 2018 ஆகஸ்ட் 13 மற்றும் 15 ஆகிய தினங்களில் ஏற்படுத்தப்பட்ட நிர்மான ஒப்பந்தங்கள் 02 இற்கு உரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்யப்பட வேண்டும். | 2018 ஆம் வருடத்தின் மாகாண குறித்த அபிவிருத்தி ஏற்பாடு (PSDG) செயற்திட்டத்தின் மூலம் இந்த நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன் அதற்காக 2018 ஆம் வருடத்திற்குள் எவ்விதமான |

| | | | |
|---|---|---|---|
| | 1,619,7161 தொகை மற்றும் பெறப்பட வேண்டிய அதே அளவும் கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | | பணப்பெறுகைகளோ அல்லது கொடுப்பனவுகளோ இடம் பெறவில்லை என்பதுடன் இந்த கொடுக்கல் வாங்கல்கள் முழுமையாக கணக்குகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் வருடத்திற்காக இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது கணக்குகளுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும். |
| (இ) | நகர மண்டபத்தின் கருத்தரங்கு மண்டபத்திற்கு தேவையான 600 கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,467,000 செலவொன்றை மேற்கொண்டிருந்தாலும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் உபகரணங்களின் கீழ் ரூபா 467,000 குறிப்பிடப்பட்டிருந்ததனால் அந்தத் தொகை ரூபா 1,000,000 வால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்யப்பட வேண்டும். | நகர மண்டபத்தின் கருத்தரங்கு மண்டபத்திற்கு தேவையான 600 கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,467,000 செலவு செய்யப்பட்டிருந்தாலும் இறுதி கணக்குகளில் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் உபகரணங்களின் கீழ் ரூபா 467,000.00 ஆக காட்டப்பட்டிருப்பது கணனிமயப்படுத்தப்படும் போது ஏற்பட்ட தவறு ஒன்று என்பதுடன் அந்த தவ நிலுவை பணத்தை நாட்குறிப்பு பதிவின் மூலம் 2018 ஆம் வருட இறுதி கணக்குகள் கூற்றிலே சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஈ) | 2018 மே மாதம் 08 ஆந் திகதி இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2,000,000 ஆன 82229475 இலக்கமுடைய நிலையான வைப்பு கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்யப்பட வேண்டும். | தாமதக் குறைப்பாட்டினால் எங்களுடைய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். |
| (உ) | பன்சல் கொடெல்ல விளையாட்டு மைதானம் ரூபா 499,990 செலவில் நிர்மானிக்கப்பட்டு விளையாட்டு மைதானத்தின் பெறுமதி நிலையான சொத்துக்கள் கணக்கில் கைவிடப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரி செய்யப்பட வேண்டும். | பன்சல் கொடெல்ல விளையாட்டு மைதானம் ரூபா 499990/= செலவில் நிர்மானிக்கப்பட்டு விளையாட்டு மைதானத்தின் பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் நிலுவையாக உள்ள வீதவரியின் மீதி ரூபா 9,471,046 ஆக இருந்தாலும் ரூபா 9,154,410 ஆக கணக்கு வைத்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அந்த மீதி ரூபா 316,636 வால் குறைவாகக காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரி செய்யப்பட வேண்டும். | வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானதென்பதுடன் அது நாட்குறிப்பு பதிவினால் சரி செய்யக்கூடியதாகும். |

### 1.3.2 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 240,473,768 பெறுமதியான 09 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள 09 விடயங்கள் தொடர்பாக விபரமான உப பதிவேடுகள் மற்றும் கால பகுப்பாய்வு என்பன எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் வருட 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபையின் 24 ஆவது பிரிவு | சபையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதைகள் இன்வென்ட்ரிக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லையென்பதுடன், காணப்படுகின்ற பாதைகள் நிர்மானிக்கப்பட்ட அனைத்து பாதைகளும் பிரிவின் பிரகாரம் வர்த்தமானி அறிவித்தலுக்குட்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | பாதைகள் இன்வென்ட்ரிக் குட்படுத்தல் மற்றும் வர்த்தமானி அறவித்தலில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | சபையினால் புதிய பாதைகள் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் இந்த வருட இறுதியில் அந்த நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 ஆம் வருட பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்<br>---------------------------- | | | |
| (i) | 217 ஆவது விதி | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப் பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படுவதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ii) | 218 ஆவது விதி | அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு தடவை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குாணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் வருடத்திற்கு ஒரு தடவை மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | பிரதேச சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை தொடர்ச்சியாக பேணுவதற்கு முடியாமல் போனதுடன் எதிர்காலத்தில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்படுதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (இ) | தாபனவிதிக் கோவை XXIV ஆவது அத்தியாயம் 3.15 | பிணைமுறி யையொப்பமிடுவதற்காக பொது 158 மாதிரியை பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் 13 சந்தர்ப்பங்களில் ரூபா 1,300,000 கடன் வழங்கும் போது பிணைப் பாதுகாப்பின்றி கடன் வழங்கப்பட்டிருந்தது. | பொது மாதிரிப்படிவம் 158 ஐ பயன்படுத்தி அனைத்து இடர் கடன்களுக்கும் பிணையாளர் கையொப்பம் பெறப்பட வேண்டும். | பிணைமுறி கையொப்பமிடுவதற்காக பொது 158 மாதிரி படிவம் பயன்படுத்தப்பட வேண்டுமெனினும் வேறு மாதிரிபடிவம் பயன்படுத்தப்பட்டதுடன் உரிய அதிகாரிகளிடம் சரியான (பொது 158) மாதிரிபடிவத்தை பூரணப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருவதுடன், எதிர்காலத்தில் உங்களால் தெளிவுபடுத்தப்பட்ட பிழையை சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். |

(ஈ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் | பிணை வைக்கப்பட வேண்டிய 05 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் வைப்பிலிடப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மேல் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 ஆகஸ்ட் மாதம் முடிவடைவதற்கு முன்னர் ஊழியர் பிணை வைப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1645 (ஆ) மற்றும் 1646 | 268 ஆவது பொது மாதிரி படிவத்தில் பேணப்படுகின்ற நாளாந்த ஓட்டக்குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு என்பவற்றை நாள் தோறும் பரீட்சித்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் கந்தளாய் பிரதேச சபைக்கு உரிய 17 வாகனங்களின் ஓட்டக் குறிப்பு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இதுவரை அனுப்பப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2019 ஜனவரிமாத ஓட்டக் குறிப்பு விபரம் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் அனுப்பப்பட வேண்டிய எஞ்சிய மாதங்களின் தகவல்கள் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,54,7,663 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,878,731 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

| வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,288 | 2,323 | 2,223 | 9,009 | 4,300 | 3,759 | 3,830 | 9,471 |
| வாடகை | 16,650 | 4,913 | 3,159 | 1,774 | 15,625 | 4,976 | 8,294 | 2,881 |
| வேறு வருமானங்கள் | 2,725 | 2,725 | 1,266 | 11,810 | 8,160 | 12,070 | 6,891 | 10,906 |

**2.2.2 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முத்திரை வருமான நிலுவையாக மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை கணக்கிட்டதனால் ரூபா 10,320,598 போலியான முத்திரை நிலுவை வருமானமாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | வருமானத்திற்குரிய முத்திரை கட்டணத்தை அடையாளங் கண்டு சரியாக கணக்கிடுவதற்கு மற்றும் போலியான நிலுவை வருமானத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கப்படும் போது முத்திரைக் கட்டணம் பல வருடங்களுக்கு முன்னரே கூடுதலாக மதிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி 10,320,598.00 தொகையொன்று நிலுவை வருமானமாக இறுதிக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. அதை நாட்குறிப்பு பதிவின் மூலம் நீக்கிக் கொள்வதற்காக 2019 ஜூன் மாதம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அனுமதியை பெற்று 2019 இறுதி கணக்கின் போது அந்த மீதியை நீக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக இங்கு தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பண்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் சம்பந்தமான காரணங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய விடயங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(அ) **உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரசட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிக் விதிக்கப்பட வேண்டிய இருப்பினும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போதும் 11 விடயங்களுக்கு உரிய2013 ஆம் ஆண்டிலே தயாரிக்கப்பட்ட உப விதியை அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உப விதிகளின் அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 06 உப விதிகள் பெற்றுக் கொள்வதற்காக கிழக்கு மாகாண திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தாலும் அதற்காக எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டாலும் அவற்றை மீண்டும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உள்ளூராட்சி ஆணையாளர் 2019.05.09 ஆந் திகதி கடிதத்தால் அறியத்தந்துள்ளார். எஞ்சியுள்ள உப விதிகளும் அனுமதியை பெற்றுக் கெர்வதற்காக நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். |

(ஆ) **செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட வேண்டுமெனினும் பாதீட்டு தயாரிப்பதற்கு மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் வருடத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

(இ) **திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை கட்டுப்பாட்டு எல்லையிலே மாதாந்தம் 150 டொன் அளவிளான குப்பைகள் கொட்டப்பட்டு வருவதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைக்கு அமைவாக குப்பைகள் | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைக்கு அமைவாக குப்பைகள் கொட்டப்பட வேண்டும். | கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிலே உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு திருகோணமலை மாவட்டத்தின் அனைத்து நிறுவனங்களுக்கும் அனைத்து கழிவுகளையும் |

கொட்டப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக காட்டு யானைகள் குப்பைகளை உணவாக உட்கொள்வதை பழகியிருப்பதனால் இது காட்டு யானைகள் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு இடையூறாக உள்ளதாக அவதானிக்கப்பட்டது. குப்பைகளை கொட்டுவதற்காக மஹவெலி அதிகாரசபையினால் சூரியபுர பிரதேசத்திலே வழங்கப்பட்டிருந்த 12 ½ ஏக்கர் நிலத்தைச் சுற்றி மின்சாரவேலை ஒன்று பொருத்தப்பட்டு முறையான கழிவு அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அகற்றுவதற்கு ஒப்பந்தத்துடன் அனுப்பப்பட்டது. இருப்பினும், அந்த நிறுவனங்கள் செயலிழந்து காணப்பட்டது. அப்போது கந்தளாய் பிரதேச சபையினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் கந்தளாய் சூரியபுரவுக்காக ரூபா 10 மில்லியன் க்கான கொம்போஸ்ட் முகாமைத்துவ மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி திணைக்களத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட ஊபுடு நிறுவனத்துடன் இணைந்து குப்பைகளை கொட்டுவதற்கு இணக்கப்பாட்டுக்கு வத்திந்ததுடன் அனுமதிக்கப்பட்ட பிலிசறு செயற்திட்டம் நிறுத்தப்பட்டது.

ஊபுடு நிறுவனம் பிரதேச சபையினால் அன்றாட் சேகரிக்கப்படும் குப்பைகளை கையேற்காததன் காரணமாக அந்த குப்பைகள் சூரியபுர காணியில் கொட்டப்பட்டது. இப்போது புதிய கழிவு நிலையமொன்று அந்த சூரியபுர காணியில் நிர்மாணிப்பதற்கான முன்மொழிவு உள்ளூராட்சி அமைச்சிற்கு மற்றும் சுற்றாடல் அதிகாரசபைக்கு மீண்டும் அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த முன்மொழிவுக்கான அனுமதி கிடைத்தவுடன் அவசரமாக மின்சாரவேலி பொருத்தப்பட்டு முறையாக குப்பைகளை கொட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குதல் 2000 இலக்கம் 53 மற்றும் 1998 இலக்கம் 56 உடைய சட்டங்களின் திருத்தங்கள் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்திற்கு அனுகூலமாக சுற்றாடலுக்கு குப்பை ஏற்படுத்தும் அச்சுத் தொழில், லொக் கல் உற்பத்தி மற்றும் நெல் ஆலை போன்ற தொழிற்முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டுமெனினும், சபை கட்டுப்பாட்டு எல்லைக்குள் அப்படியான தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மதிப்பீடொன்று மீளாய்வாண்டிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 37 தொழில்முயற்சிகளுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விலக்களிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிலே அப்படியான 84 தொழில் முயற்சிகள் காணப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. | சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தொழிற்முயற்சிகள் தொடர்பாக வருடாந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் 2019 ஆம் வருடத்திற்காக சபையின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மதிப்பீடொன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 2017 ஆம் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், இலக்கு மற்றும் உரிய நிரல்கள் மீளாய்வாண்டிலே அடையாளம் கண்டிருக்க வில்லை. அது தொடர்பான போதுமான அறிவை மீளாய்வாண்டிலே பெற்றுக் கொள்ளாததன் காரணமாக எவ்வித வேலைத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | உரிய சட்டங்கள் விதிகள் சுற்றுநிருபத்திற்கு அனுகூலமாக நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், மற்றும் இலக்கு என்பவற்றை அடையாளங் கண்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சு அல்லது உள்ளூராட்சி திணைக்களத்தின் ஊடாக நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கு தொடர்பாக முறையான செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு அல்லது விழிப்புணர்வுகள் இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான அடிப்படைகளை உரிய |

|  |  | தரப்பினர் பெற்றுத் தந்திருத்தால் அதற்காக பங்களிப்பு செய்திருக்க முடியும். |
|---|---|---|

**3.2 முகாமைத்துவ திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் சேவையில் இருந்து சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட நான்கு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 1,259,195 வை தாபன விதிக்கோவையின் XXIV ஆவது அத்தியாயத்தின் 04 ஆவது பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தாமதமின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தாபன விதிக்கோவையின் ஓஓஐஏ ஆவது அத்தியாயத்தின் உரித்தாவது சேவையை பூர்த்தி செய்த அல்லது ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கே யாகும். இருப்பினும் கீழ் குறிப்பிடப்பட்டவர்களின் சேவையை பூர்த்தி செய்தோ அல்லது ஓய்வு பெற்றோ இருக்கவில்லை என்பதுடன் அவர்களின் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கந்தளாய் பிரதேச சபையினால் நடாத்தப்படுகின்ற சுதந்திர ஆயுர்வேத மருந்து நிலையத்திற்கான இரண்டு வைத்தியர்கள் உள்ளூராட்சி திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டிருந்தாலும் அந்த மருந்து நிலையத்தில் 47 வகையான மருந்துகள் விநியோகிக்கப்பட்டாலும் வருடம் முழுவதும் பெரும் மருந்து பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. | கந்தளாய் சுதந்திர ஆயுர்வேத மருந்து நிலையத்திற்கு தேவையான அளவு மருந்து தொகை பற்றாக்குறையின்றி பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கந்தளாய் சுதந்திர ஆயுர்வேத மருந்து நிலையத்திற்காக மருந்து கொள்வனவு செய்வதற்கு போதுமான அளவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக மருந்து கொள்வனவு செய்வதற்கு முடியாது போனதுடன் ஏற்பாட்டின் படி ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க மருந்து வகைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | இருப்பினும், 2019 ஆம் வருடத்திலே ரூபா பத்து இலட்சம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதன் காரணமாக மருந்து பற்றாக்குறையொன்று ஏற்படாவண்ணம் கொள்வனவு செய்வதற்கு முடியுமென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 31ஸ்ரீ8972 இலக்க கார் 10 வருடங்களுக்கு அதிகமான காலம் அழிவதற்கு இடமளிக்கப்பட்டிருப்பதுடன் 02 உழிவு இயந்திர ட்ரேலர் 05 வருடங்களாக அழிவுறுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | அறிவுறுத்துவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 31ஸ்ரீ81உடைய கார் வாகனம் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக பயன்பாட்டுக்கு பொருத்தமில்லாததுடன் பாவனைக்கு உதவாத வாகனமாக வேறுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.<br><br>உழவு இயந்திரம் ட்ரேலர் வாகனம் இரண்டும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன் சபையின் நீதி வல்லமை குறைவாக காணப்பட்டதால் திருத்தங்களை மேற்கொள்வது தாமதமாகியிருந்தது. பணம் கிடைத்த பிற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காரியாலாய உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறுதலை அடையாளப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் விரல் அடையாள இயந்திரம் நடைமுறையில் இருந்தாலும் Print Out பெற்றுக் கொள்வதற்கு முடியாதென்று கூறி அங்கு வருகை, வெளியேறுதலை பதிவுக்குட்படுத்தாமல் பயனற்ற வகையில் பொருத்தப்பட்டிருந்தது. | சொத்துக்களை உபயோகப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள போதும் இதுவரை அறிக்கைப் படுத்தப்படவில்லை. 2019 யூன் 01 ஆந் திகதியாகும் போது தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.3 வருடாந்த பொருட்கள் / தொகை மதிப்பீடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 17 ஆந் திகதி மற்றும் 2018 நவம்பர் 28 ஆந் திகதி உடைந்த பொருட்களை ஏல விற்பனையின் போது நீக்கப்பட வேண்டிய 26 வகைகளின் சொத்துக்களின் கிரயத்தை நிலையான சொத்துக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | கிரயத்தை கணக்கீட்டு கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆம் வருடத்திற்கு உரிய ஏலவிற்பனைக்கு உட்படுத்தக்கூடிய உடைந்த பொருட்களை நிலையான சொத்துக்களிலிருந்து நீக்கி நாட்குறிப்பு பதிவின் மூலம் நீக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | நூல் நிலையத்திலிருந்து நீக்கப்பட்ட 77 புத்தகங்களின் கிரயத்தை நூல் நிலைய புத்தக பெறுமதியில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | கிரயத்தை கணக்கீட்டு கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | |

### 3.4.4 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தளாய் பிரதேச சபைக்கு சொந்தமாக 17 மோட்டார் வாகனங்கள் உள்ளதுடன் அவற்றுள் 04 வாகனங்களுக்கு காப்புறுதி பாதுகாப்பும் 12 வாகனங்களுக்கு 2018 ஆம் ஆண்டு வருமான உத்தரவுப் பத்திரமும் பெற்றிருக்கவில்லை. | வாகன வருமான உத்தரவுப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கும் மற்றும் காப்புறுதி பாதுகாப்பு என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த சபைக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பாக நீண்ட காலத்திலிருந்து வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அந்த வாகனங்களுக்கு உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு முழுமையான நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இருப்பினும், பல வருடங்களாக உத்தரவுப் பத்திரம் பெறப்படாததன் காரணமாக பெரிய செலவொன்றை தாங்கிக் கொள்ள நேரிடும். அதற்காக சில சலுகைகளை பெற்றுத் தருமாறும் கிழக்கு மாகாண ஆளுனருக்கும் மற்றும் பிரதான செயலாளருக்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது. இது இணைப்பு 09 மற்றும் 10 ஆக இணைக்கப்பட்டுள்ளன. அந்த சலுகை பெற்றதன் பின்னர் அல்லது 2020 நிதிஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்டு இந்த நடவடிக்கைகைய நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம். |
| (ஆ) | 2019 மார்ச் மாதம் 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிதரப்பினருக்கு சொந்தமான உழவு இயந்திரமொன்று பகுதி பிரிக்கப்பட்டு காரியாலய பூமியில் உள்ள கராஜில் | வெளித்தரப்பினரின் சொத்துக்கள் மற்றும் வளவுக்குள் உட்பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்படக் கூடாது. | மதிப்பிற்குரிய உழவு இயந்திரம் சபைக்கு அண்மித்த இடமொன்றில் செயலிழந்து காணப்பட்டதுடன் அந்த உழவு இயந்திரம் சபைக்கு கொண்டு வரப்பட்டு திருத்தப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மேலும், |

| | | |
|---|---|---|
| திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் HW 2908 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் நீண்ட காலமாக கராஜிற்குள் வைக்கப்பட்டள்ளதாக அவதானிக்கப்பட்டது. | | எதிர்காத்தில் சபைக்கு சொந்தமல்லாத வாகனங்கள் சபைக்குள் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றேன். |

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே பெறுகைகள் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தாலும் பெறுகைகள் திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் மீதமான காலாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**3.5.2 வழங்கல்கள் மற்றும் சேவை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.11.3(அ) பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை பெறுகைகள் கையேட்டில் அடங்கியுள்ள உரிய மாதிரிக்கு உட்பட்ட அறிக்கைப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும் கந்தளாய் பிரதேச சபையினால் அவ்வாறான பதிவேடொன்றை பராமரித்திருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை பேணப்பட்டிருக்க வேண்டும். | பெறுகைகள் கையேட்டில் உள்ளடங்கியுள்ள உரிய மாதிரி ஒன்று காணப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான பதிவேடொன்றை பராமரிப்பதால் தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்திலே 2009/6/09 DMA/2009(1) உடைய சுற்று நிருப்பத்தின் பிரகாரம் பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். | பிரதேச சபையின் உள்ள கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் 2009/6/09(1) உடைய DMA/2009(1) இலக்கமுடைய சுற்று நிருபத்தின் பிரகாரம் பிரதேச சபையினால் கணக்காய்வு மற்றம் முகாமைத்துவ குழுக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | 2019/05/23 ஆந் திகதி பிரதேச சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டப்பட்டு குழு நடாத்தப்பட்டது. |

### 4.3 தீர்வு காணப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் விடையளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகள்

**(அ) தீர்வு காணப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சென்ற வருடத்திலே கணக்குகளில் சீர் செய்யப்பட வேண்டுமென கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட சீராக்கங்கள் மீளாய்வாண்டிலேயும் இடம்பெற்றிருக்கவில்லை. | கணக்குகளின் சீராங்களின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலே கணக்காய்வு சுட்டிக்காட்டிய அனைத்து சீராக்கங்களும் நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |